Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, பிப்ரவரி 28, 2025 | இதழ் 321

# அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் குடியரசுத்தலைவர் பங்கேற்பு

சென்னை, 28 பிப்ரவரி 2025: அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று (27.02.2025) குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொண்டார்.

விழாவில் பேசிய குடியரசுத் தலைவர், நம்மைச் சுற்றி பல்வேறு பிரச்சினைகள் இருந்த போதிலும், அவற்றில் பலவற்றுக்கு வடிவமைப்பில் மாற்றங்கள் மட்டுமே தேவைப்படுகின்றன என்றும், அதற்காக ஆதார வளங்கள் கூடுதலாகத் தேவை இல்லை என்றும் கூறினார். ஆக்கப்பூர்வமான சிந்தனையானது வாழ்வியல் முறையை எளிதாக்கி தீர்வுகள் காண வழிவகுக்கும் என்றும் குறிப்பாக சமூகத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு, பொருளாதார வளர்ச்சி அடைய வடிவமைப்புத்துறை வளர்ச்சி அடையவேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்தார். தேசிய வடிவமைப்பு நிறுவனம் 'சமூக மேம்பாட்டுக்கான சேவையாக வடிவமைப்பு' உள்ளது என்பதை வலியுறுத்தும் வகையில் செயல்பட்டு வருவதற்கு அவர் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

நாட்டில் வடிவமைப்பு என்பது அனைத்து சமூகங்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளதுடன் பாரம்பரியம் மிக்கதாகவும் உள்ளது என்று அவர் தெரிவித்தார். வடிவமைப்பு தொடர்பான செயல் முறைகளை ஆவணப் படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். நாட்டின் கலாச்சார நடைமுறைகள் 21-ம் நூற்றாண்டில் உலக நாடுகள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களுக்கான தீர்வுகளைக் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். எனவே, நாட்டின் வேறுபட்ட கலாச்சாரங்களிலிருந்து பெறப்பட்ட வரலாற்று ரீதியான தீர்வுகளுக்கு புத்துயிர் அளிப்பதும், புதிய கண்டுபிடிப்புகளுக்கு அவற்றை பயன்படுத்துவதும் நாட்டிற்கு பயனளிப்பதாக மட்டுமின்றி உலக அளவில் முன்னேற்றத்திற்கும் பயனுள்ளதாக அமையும் என்று கூறினார்.

நேர்மறையான சமூக மாற்றத்தை உருவாக்கும் வகையில் வடிவமைப்புத் துறையின் வலிமையை துறை சார்ந்த பிரதிநிதிகள் நிரூபித்துள்ளதாகவும் குடியரசுத்தலைவர் கூறினார். அவர்கள் சமூகத்தில் பயனுள்ள வகையில் வடிவமைப்பு தொடர்பான செயல் முறைகளை மேற்கொள்வதாக அவர் கூறினார். சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் துப்புரவு போன்ற துறைகளில் முன்னேற்றங்களைக் கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

# மகா கும்பமேளாவில் ஆயுஷ் மருத்துவ முறைகளின் மூலம் 8 லட்சம் பக்தர்கள் பயனடைந்தனர்

சென்னை 28, பிப்ரவரி 2025 : மகா கும்பமேளாவில் லட்சக்கணக்கான பக்தர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ஆயுஷ் அமைச்சகம் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட யாத்ரீகர்கள் ஆயுஷ் மருத்துவ முறைகளின் கீழ் சுகாதார சேவைகளைப் பெற்றனர். மகா கும்பமேளாவின் போது பக்தர்களின் புனிதமான பயணத்தை பாதுகாப்பானதாகவும் ஆரோக்கியமாகவும் இது ஆக்கியுள்ளது.

20 ஆயுஷ் வெளி நோயாளிகள் பிரிவை அமைப்பது முதல், நடமாடும் சுகாதார பிரிவுகளை நிறுவுவது வரை, 90-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் 150 சுகாதாரப் பணியாளர்கள் இந்த மாபெரும் ஆன்மீக நிகழ்வு முழுவதும் தொடர்ச்சியான மருத்துவ சேவையை வழங்க அயராது உழைத்தனர். இந்த அர்ப்பணிப்பு முயற்சிகள் பக்தர்களும், துறவிகளும் உடல்நலன் குறித்த கவலைகள் இல்லாமல் புனித விழாக்களில் பங்கேற்பதை உறுதி செய்தது. குறிப்பாக புனித மகாசிவராத்திரி நீராடலின் போது இது உறுதி செய்யப்பட்டது.

பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவின் ஆயுஷ் பொறுப்பு அதிகாரி டாக்டர் அகிலேஷ் குமார் சிங் பேசிய போது, எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்களின் சுகாதாரத் தேவைகளை அமைச்சகம் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது என்றும், இது பாரம்பரிய இந்திய மருத்துவத்தின் மீது வளர்ந்து வரும் மக்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது என்றும் கூறினார். மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனம் நடத்திய யோகா அமர்வுகள் மூலமும் பக்தர்கள் பயனடைந்தனர். இது உடல் மற்றும் மன நலனை மேம்படுத்தியதாக அவர்கள் தெரிவித்தார்.

# தற்சார்பு இந்தியா இலக்கை அடைய இளைஞர்கள் உறுதியேற்க வேண்டும் என்று மக்களவை தலைவர் வலியுறுத்தியுள்ளார்

சென்னை 28, பிப்ரவரி 2025 : வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் தற்சார்பு இந்தியா இலக்கை அடைய இளைஞர்கள் உறுதியேற்க வேண்டும் என்று மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா இன்று வலியுறுத்தினார். புதிய இந்தியாவில் பல்வேறு துறைகளில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்று குறிப்பிட்ட அவர், 2047-ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவது என்ற தீர்மானத்தை அடைவதற்கு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் இளைஞர்கள் முன்னோடியாக திகழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

புனே பாரதி வித்யாபீடத்தின் 26 வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய திரு பிர்லா, நம் நாட்டு இளைஞர்கள் ஏற்கனவே தங்கள் அறிவு, திறன் மற்றும் ஞானத்தால் உலகை வழிநடத்தி வருவதாகக் குறிப்பிட்டார். வளர்ந்த நாடுகளின் வளமும் கூட அந்த நாடுகளில் உள்ள இந்திய இளைஞர்களின் பங்களிப்பின் விளைவாகும் என்று குறிப்பிட்டார்.

புதிய இந்தியா புதிய வாய்ப்புகளுடன் வளமான பாதையில் முன்னேறுகிறது என்று கூறிய திரு பிர்லா, இந்திய இளைஞர்கள், தங்கள் எதிர்காலத்திற்காக வளர்ந்த நாடுகளை எதிர்நோக்குவதற்கு மாறாக, 2047-ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற தங்களது திறமை மற்றும் ஆற்றலை செலுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், பாரதி வித்யாபீடத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு திரு பிர்லா சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

# தேசிய அறிவியல் தினம் 2025

சென்னை 28, பிப்ரவரி 2025 : கொல்கத்தாவில் உள்ள இந்திய அறிவியல் சங்கத்தின் ஆய்வகத்தில் பணிபுரிந்து புகழ்பெற்ற இயற்பியலாளர் சர் சி.வி.ராமன் கண்டுபிடித்த 'ராமன் விளைவை' நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் பிப்ரவரி 28-ம் தேதி தேசிய அறிவியல் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தக் கண்டுபிடிப்பிற்காக, அவருக்கு 1930-ம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. தேசிய அறிவியல் தினத்தன்று, அறிவியல் சார்ந்த நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. முதலாவது அறிவியல் தினம் 1987-ம் ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதி கொண்டாடப்பட்டது. எதிர்கால தலைமுறையினருக்கு அறிவியல் மீதான ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகள் என்ற கருபொருளில் அறிவியல் தினம் கொண்டாடப்பட உள்ளது. உலக அளவில் இந்தியாவின் தலைமைத்துவத்தை மேம்படுத்தும் வகையிலும் வளர்ச்சியடைந்த தற்சார்பு இந்தியாவை உருவாக்கும் நோக்கிலும் வடிவமைக்கப்பட்ட வளர்ச்சியடைந்த இந்தியா 2047 என்ற தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப நாட்டின் அறிவியல், தொழில்நுட்பத்தை முன்னெடுத்துச் செல்வதில் இளைஞர்களின் பங்களிப்பை வலியுறுத்தும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படவுள்ளது.

அறிவியலின் முக்கியத்துவம், அதன் பயன்பாடு குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது. இது ஆண்டுதோறும் நடைபெறும் அறிவியல் சார்ந்த நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருக்கிறது.




# நாசாவின் முன்னாள் விண்வெளி வீரர் மைக் மாசிமினோ பிஎம் ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா மாணவர்களுடன் கலந்துரையாடினார்

சென்னை 28, பிப்ரவரி 2025 : நாசாவின் முன்னாள் விண்வெளி வீரர் திரு மைக் மாசிமினோ புதுதில்லியில் இன்று பிஎம் ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா மாணவர்களுடன் கலந்துரையாடினார். ஏஆர்-விஆர் ஆய்வகம், அடல் ஆய்வகம், மொழி ஆய்வகம் உள்ளிட்ட பள்ளியின் ஆய்வக வசதிகளையும் திரு மாசிமினோ பார்வையிட்டார்.

மாணவர்களுடன் உரையாடிய திரு மாசிமினோ, இந்தியாவின் சந்திரயான் -3 பணியைப் பாராட்டினார். இது இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகளாவிய விண்வெளி சமூகத்திற்கும் அது முக்கியத்துவம் வாய்ந்தது என்று வலியுறுத்தினார். சந்திரனின் தென் துருவத்தில் தரையிறங்குவதில் உள்ள சவால்கள் மற்றும் இந்த சாதனை வசிப்பிடத்திற்கு அவசியமான நீர் ஆதாரங்கள் குறித்த முக்கிய நுண்ணறிவுகளை எவ்வாறு வழங்க முடியும் என்பதை அவர் விரிவாக எடுத்துரைத்தார். கூடுதலாக, எதிர்கால விண்வெளித் திட்டங்களில் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக் காட்டினார்.

7 விண்வெளி வீரர்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு திரைப்படம் தன்னை ஒரு விண்வெளி வீரராக மாற எவ்வாறு தூண்டியது என்பதை திரு மாசிமினோ மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். விண்வெளி ஆராய்ச்சி மற்றும் விண்வெளிப் பயணங்களின் போது தாங்கள் எடுத்துக் கொண்ட உணவு வகைகள் போன்றவற்றைப் பற்றிய மாணவர்களின் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

தனது தனிப்பட்ட அனுபவங்களை விவரித்த அவர், விண்வெளியில் பூஜ்ஜிய ஈர்ப்பு விசைக்கு ஏற்ப எவ்வாறு தம்மை தயார்படுத்திக் கொண்டேன் என்பதை விவரித்தார். மேலும் அவர்களின் தூக்கம், பணிசெய்வதற்கான முறைகள் போன்றவற்றை விரிவாக விளக்கினார்.

விண்வெளி ஆய்வில் செயற்கை நுண்ணறிவின் பங்கு குறித்து மாணவர்கள் ஆர்வமாக கேள்விகள் கேட்டனர். இதற்கு பதிலளித்த அவர், செயற்கை நுண்ணறிவானது செயல்முறைகளை நெறிப்படுத்தி, அவற்றை மிகவும் திறமையானதாகவும், செலவு குறைந்ததாகவும், பாதுகாப் பானதாகவும் மாற்றும் என்று விளக்கினார்.

தனது கலந்துரையாடலை நிறைவு செய்த அவர், விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் மற்றும் திறன்கள் குறித்து அறிவுரை வழங்கினார்.

ஒரு விண்வெளி வீரராக இருப்பதால் உள்ள சவால்கள் மற்றும் அவர்களின் தயாரிப்புக்கு அவசியமான முக்கிய பாடங்கள் குறித்து மாணவர்கள் பல கேள்விகளைக் கேட்டனர். மண் அறிவியல் மற்றும் கடல் உயிரியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஆராய்வதன் முக்கியத்துவத்தை திரு மாசிமினோ வலியுறுத்தினார். நாசாவில் அவர் பணியாற்றிய மிகவும் சவாலான திட்டம் குறித்தும், எதிர்காலத்தில் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வசிக்க முடியுமா என்றும் மாணவர்கள் அவரிடம் கேட்டனர். □ந்திரனில் வாழ்வது விரைவில் ஒரு யதார்த்தமாக மாறக்கூடும் என்றாலும், தொழில்நுட்ப சவால்கள் காரணமாக செவ்வாய் கிரகத்தில் குடியேற நீண்டகாலம் ஆகும் என்றும் அவர் விளக்கினார்.

# வீட்டு வசதி வாரியம் சார்பில் ரூ.660 கோடியில் 1046 அடுக்குமாடி குடியிருப்புகள்: முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை 28, பிப்ரவரி 2025 : முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 659 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1046 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 116 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 464 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார். சென்னை மாவட்டம், செனாய் நகரில் 131 கோடியே 27 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 240 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் கே.கே நகரில் 51 கோடியே 29 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 120 அடுக்குமாடி குடியிருப்புகள், செங்கல்பட்டு மாவட்டம், ராஜகுளிப்பேட்டையில் 43 கோடியே 81 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 116 அடுக்குமாடி குடியிருப்புகள்;

சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ், சென்னை மாவட்டம் நெற்குன்றத்தில் 433 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 570 அடுக்குமாடி குடியிருப்புகள்;



தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டம், செங்குளத்தில் 116 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 464 அடுக்குமாடி குடியிருப்புகள்;

என மொத்தம் 776 கோடியே 51 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ்.சமீரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிவாஜி புரொடக்ஷன்ஸ் சோலா சக்கரவர்த்தி, ஜிஎம் ஃபிலிம் கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும், இயக்குநர் மோகன் ஜி இயக்கத்தில், ரிச்சர்ட் ரிஷி நடிக்கும் 'திரௌபதி 2'!



சென்னை 28, பிப்ரவரி 2025: 'திரௌபதி'யை பெரிய திரைகளில் வரவேற்கும் நேரம் இது. இயக்குநர் மோகன் ஜி மற்றும் நடிகர் ரிச்சர்ட் ரிஷி ஆகியோர் இணைந்த 'ருத்ர தாண்டவம்' மற்றும் 'திரௌபதி' படங்கள் வணிக ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் வரவேற்பு பெற்றது. இப்போது இவர்கள் மீண்டும் 'திரௌபதி 2' படத்தில் இணைந்துள்ளனர். இம்முறை, 14 ஆம் நூற்றாண்டின் பின்னணியில் கதை அமைக்கப்பட்டுள்ளது. வரலாற்றின் பக்கங்களில் இருந்து ஒருபோதும் மறைந்துவிடாத தீவிரமான போர்வீரர்களைச் சுற்றி கதை அமைக்கப்பட்டுள்ளது. ஜிஎம் ஃபிலிம் கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் இணைந்து சிவாஜி புரொடக்ஷன்ஸ் சோலா சக்கரவர்த்தி இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.

படத்தின் முதல் பார்வை மற்றும் மோஷன் போஸ்டர் இரண்டும் வெளியான சிறிது நேரத்திலேயே ரசிகர்கள் மற்றும் திரையுலகினர் கவனத்தைக் கவர்ந்தது.

இதுபற்றி இயக்குநர் மோகன் ஜி பேசியிருப்பதாவது, "படத்தின் தலைப்பு மற்றும் முதல் பார்வைக்கு கிடைத்த வரவேற்பு மகிழ்ச்சியடைய செய்திருக்கிறது. வரும் மார்ச் மாதம் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது. மும்பை, ஹைதராபாத், மத்திய பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய இடங்களில் இதற்கு முன்பு எங்கும் பார்த்திராத இடங்களில் மொத்த படப்பிடிப்பும் நடக்க இருக்கிறது. இந்த வருட முடிவுக்குள் படம் உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் வெளியாகிறது.

'திரௌபதி 2' திரைப்படம் 14 ஆம் நூற்றாண்டின் பின்னணியில் ஹொய்சாள வம்சத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ளது. தர்மத்திற்காக தங்கள் உயிரை தியாகம் செய்த அந்த வீரம் மிக்க வீரர்களின் கதையை இந்தப் படம் சொல்லும்" என்றார்.

இப்படம் ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் உருவாகவுள்ளது. ஜிப்ரான் வைபோதா இந்த படத்திற்கு இசையமைக்கிறார். மோகன் ஜி மற்றும் ஜிப்ரான் வைபோதா முதன்முறையாக இணைந்துள்ள படம் 'திரௌபதி 2' என்பது குறிப்பிடத்தக்கது.

படம் குறித்தான அடுத்தடுத்த அறிவிப்புகள் மற்றும் படத்தில் நடிக்கவுள்ள மற்ற பெரிய நடிகர்கள் விவரமும் விரைவில் வெளியாகும்.

## ஆக்ஷனில் மாஸ் காட்டிய ஆகாஷ் ஜெகன்நாத்.. பட்டையை கிளப்பும் தல்வார் கிளிம்ப்ஸ் வீடியோ..!! எதிர்பார்ப்பை எகிற செய்த ஆகாஷ் ஜெகன்நாத்தின் 'தல்வார்' கிளிம்ப்ஸ் வீடியோ..!!


சென்னை 28, பிப்ரவரி 2025: பிளாக்பஸ்டர் கமர்ஷியல் திரைப்படங்களை இயக்கி நாடு முழுக்க பிரபல இயக்குநராக அறியப்படுபவர் இயக்குனர் பூரி ஜெகன்நாத். இவரது மகன் ஆகாஷ் ஜெகன்நாத் கடந்த சில ஆண்டுகளில் திறமை மிக்க நடிகராக உருவெடுத்திருக்கிறார்.

குழந்தை நட்சத்திரமாக பயணத்தை தொடங்கிய ஆகாஷ் ஜெகன்நாத் ஏராளமான திரைப்படங்களில் நடித்த பிறகு கதாநாயகனாக அறிமுகமானார்.

இவர் நடிப்பில் வெளியான பல்வேறு திரைப்படங்கள் பெரும் வெற்றி பெற்ற நிலையில், ஆகாஷ் ஜெகன்நாத் நடித்துள்ள அடுத்த படம் ரிலீசுக்கு தயாராகி உள்ளது. 'தல்வார்' என்ற தலைப்பில் உருவாகி இருக்கும் இந்தப் படம் பெரும் பொருட் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இ.எல்.வி. குழும நிறுவனங்கள் மற்றும் வார்னிக் ஸ்டுடியோஸ் நிறுவனர் டாக்டர் பாஸ்கர் இ.எல்.வி. இந்தப் படத்தை தயாரித்துள்ளார். காசி பரசுராம் இப்படத்தை இயக்கியுள்ளார்.

சமீபத்தில் இதன் ஆடியோ கிளிம்ப்ஸ் வெளியிடப்பட்டது. இந்த கிளிம்ப்ஸ் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றதோடு, படத்திற்கான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தி இருக்கிறது. மிக பிரமாண்டமாக உருவாகி இருக்கும் 'தல்வார்' அதிரடி சண்டை காட்சிகள் நிறைந்த ஆக்ஷன் திரைப்படமாக உருவாகியுள்ளது.




தல்வார் திரைப்படத்தை பான்-இந்தியன் படமாக வெளியிட படக்குழு திட்டமிட்டு வருகிறது. தற்போது இந்தப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், படப்பிடிப்பு பணிகள் வருகிற ஜூன் மாதம் நிறைவு பெற இருக்கிறது. இதைத் தொடர்ந்து இந்தப் படம் வருகிற செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் ரிலீஸ் செய்ய படக்குழு திட்டமிட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளில் ஏராளமான ஆக்ஷன் காட்சிகளை படமாக்க வேண்டியிருப்பதால், படக்குழு இதனை எழுதுவதற்கும் படப்பிடிப்புக்கும் அதிக நேரம் எடுத்துக் கொண்டுள்ளது. ஆகாஷ் ஜெகன்நாத் இந்தப் படத்தில் முதன்மை ஹாதாபாத் திரத்தில் நடித்துள்ள நிலையில், பிரகாஷ் ராஜ், பூரி ஜெகன்நாத், அனசுயா பரத்வாஜ், ஷின் டூம் சாக்கோ, அஜய் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும், வட இந்திய, பாலிவுட் திரையுலகை சேர்ந்த சில நடிகர்களும் இந்தப் படத்தில் பணியாற்றி யுள்ளனர்.

இந்தப் படம் ரசிகர்களுக்கு தலைசிறந்த சினிமா அனுபவத்தை வழங்கும் நோக்கில் இயக்குனர் காசி பரசுராம் இயக்கியுள்ளார் என்று வார்னிக் ஸ்டுடியோஸ்-இன் தயாரிப்பு பிரிவு தலைவர் ஜானி பாஷா தெரிவித்துள்ளார். இந்தப் படத்திற்கு கேசவ கிரண் இசையமைக்கிறார். சண்டை காட்சிகளை தினேஷ் காசி மேற்கொள்ள, ஒளிப்பதிவு பணிகளை திரிலோக் சித்து மேற்கொண்டுள்ளார். இந்தப் படம் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடா மற்றும் மலையாளம் மொழிகளில் உருவாக்கப்பட்டு வருகிறது.

தொழில்நுட்ப குழு விவரம்:

நிர்வாக தயாரிப்பு: ஜானி பாஷா (வார்னிக் புரொடக்ஷன்ஸ்). இசையமைப்பாளர்: கேசவ கிரண். ஒளிப்பதிவு: திரிலோக் சித்து. சண்டை பயிற்சி: தினேஷ் காசி. தயாரிப்பு நிர்வாகம்: மஞ்சுநாத் கே.என். ஆடை வடிவமைப்பு: தீப்தி தேசாய். ஆகாஷ் ஜெகன்நாத் ஒப்பனையாளர்: மணிதர் தபசும். ராஷ்மிகா சந்தோஷ் (வார்னிக் புரொடக்ஷன்ஸ்). வார்னிக் புரொடக்ஷன்ஸ் குழு: ஹரிஹரா சுதன், ராஷ்மிகா சந்தோஷ், நாகேந்திர ரெட்டி, யனடி ரெட்டி. விளம்பர வடிவமைப்பு: ஏவ்ஸ் டிசைன்ஸ் - அவினாஷ், சிவபிரகாசம் (வார்னிக் புரொடக்ஷன்ஸ்). டைட்டில் அனிமேஷன்: ஸ்ரீ வர்ஷன்.

## உற்பத்தி திறனை 1 ஜிடபிள்யு அளவிற்கு உயர்த்தும் விக்ரம் சோலார் ; உயர்திறன் மிக்க சோலார் மாட்யூல்களை கொண்டு தொழிலகத்தின் தரத்தையும் மேம்படுத்தியிருக்கிறது




சென்னை, 28 பிப்ரவரி 2025: இந்தியாவில் முன்னணி சோலார் போட்டோ - வோல்டெய்க் (பிவி) மாட்யூல் தயாரிப்பு நிறுவனங்களுள் ஒன்றான விக்ரம் சோலார் லிமிடெட், மேற்கு வங்க மாநிலத்தில் தனது ஃபால்ட்டா உற்பத்தி ஆலையில் 1 ஜிடபிள்யு அளவுக்கு அதன் உற்பத்தி திறனை வெற்றிகரமாக அதிகரித்திருக்கிறது. கூடுதலாக, தமிழ்நாடு மாநிலத்தில் சென்னை அருகே ஒரகடத்தில் அமைந்துள்ள தொழிலகத்தில் நிறுவப்பட்டிருந்த உற்பத்தி பிரிவுகளையும் தரம் உயர்த்தி இருக்கிறது. டாப்கான் மற்றும் ஹெச்ஜெதி உட்பட, அதிக திறன்மிக்க தொழில்நுட்ப மாட்யூல்களை தயாரிப்பதற்கு இந்த உற்பத்தி ஆலையை ஏதுவாக்கும் வகையில் இத்தகைய தரம் உயர்த்தல் பணியை அது மேற்கொண்டிருக்கிறது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைக்குள் இந்நிறுவனத்தின் சிறப்பான வளர்ச்சி பயணத்தில் ஒரு முக்கிய முன்னேற்ற நடவடிக்கையாக அமைந்திருக்கும் இந்த முக்கியமான முன்னெடுப்புகள், விக்ரம் சோலார் - ன் வருடாந்திர நேம்பிளேட் உற்பத்தி திறனை 4.5 ஜிடபிள்யு - க்கு உயர்த்தும். 2024 டிசம்பர் 5 அன்று அத்தியாவசிய இயந்திரங்கள் / சாதனங்கள் நிறுவலோடு தொடங்கிய ஃபால்ட்டா செயல் திட்டமானது, இப்போது அதன் திட்டமிடப்பட்ட 1 ஜிடபிள்யு திறன் விரிவாக்கம் என்ற இலக்கை வெற்றிகரமாக அடைந்திருக்கிறது. இதற்கும் மேலாக, 2024 ஜூலை 19 அன்று, சென்னையில் தொடங்கப்பட்ட விரிவாக்க திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. ஒரகடத்தில் உள்ள உற்பத்தி தொழிலகத்தில் இதுவரை இருந்து வந்த தயாரிப்பு திறன் அளவுகளை இது மேலும் மேம்படுத்தியிருக்கிறது. விக்ரம் சோலார் - ன் தலைவர் & நிர்வாக இயக்குனர் திரு. ஞியானேஷ் சௌத்ரி மேலும் பேசுகையில், "விக்ரம் சோலார் - ன் கொல்கத்தா மற்றும் சென்னை உற்பத்தி தொழிலகங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் விரிவாக்க செயல்பாடுகள், எமது உற்பத்தியின் அளவை அதிகரிக்க எங்களுக்கு உதவும். அத்துடன் நிலைப்புத் தன்மையுள்ள ஆற்றல் தீர்வுகளை வழங்குவதற்கான எமது திறன்களை உயர்த்தி வலுப்படுத்தும். திறனை மேம்படுத்தவும், சர்வதேச தரம் மற்றும் நிலைப்புத்தன்மை தரநிலைகளுக்கு இணக்கத்தை உறுதி செய்யவும் மேம்பட்ட நவீன உற்பத்தி உத்திகளை இந்த இரு செயல்திட்டங்களும் திறம்பட பயன்படுத்தியிருக்கின்றன. சுய நிறைவுள்ள பாரதம் என்ற தொலைநோக்கு குறிக்கோளை பூர்த்தி செய்வதற்கு உதவும் விதத்தில் உயர்தர சோலார் பேனல்களை தயாரித்து வழங்குவதற்கு இது எங்களை ஏதுவாக்கும். தூய்மையான மற்றும் பசுமையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு சக்தியினை வழங்கும் எமது செயல் முயற்சி பயணத்தில் இது மற்றுமொரு மைல்கல்லாக இருக்கும்." என்று கூறினார்.

புத்தாக்கத்தை முன்னெடுக்கவும், நிலைப்புத் தன்மையுள்ள இயக்க செயல்பாடுகளை உயர்த்தவும் விக்ரம் சோலார் கொண்டிருக்கும் பொறுப்புறுதியை அடிக்கோடிட்டு காட்டுவதாக விரிவாக்கப்பட்ட உற்பத்தி திறன் நடவடிக்கையும், தரம் உயர்த்தப்பட்ட உற்பத்தி பிரிவுகளும் இருக்கின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட அளவான 4.5 ஜிடபிள்யு, நேம் பிளேட் திறனைக் கொண்டு, உலகளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தளத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த வலுவான நிலையில் தன்னை விக்ரம் சோலார் நிலை நிறுத்தியிருக்கிறது. அத்துடன், இந்தியாவின் பசுமை ஆற்றலை நோக்கிய நிலைமாற்ற செயல்பாட்டில் தனது தலைமைத்துவ பொறுப்பையும் இது வலுப்படுத்தியிருக்கிறது. விக்ரம் சோலார் குறித்து:

இந்தியாவின் முன்னணி சோலார் மாட்யூல் தயாரிப்பாளர்களுள் ஒன்றான விக்ரம் சோலார் லிமிடெட், 39 நாடுகளில் செயல்பாட்டைக் கொண்டு திறன்மிக்க போட்டோ வோல்டெய்க் (பிவி) மாட்யூல் உற்பத்தியில், சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் இது, 2024 மார்ச் 31 அன்று ஒட்டுமொத்தமாக 3.5 ஜிடபிள்யு உற்பத்தி திறனுடன் இந்தியாவில் மிகப்பெரிய பிவி மாட்யூல் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாக இயங்கி வருகிறது. பிவி இஎல் - ன் போட்டோ வோல்டெய்க் மாட்யூல் நம்பகத்தன்மை மதிப்பீட்டில் "முதன்மை செயற்பாட்டாளராக" விக்ரம் சோலார் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. புளூம்பெர்க் என்இஎஃப் - ன் நிலை 1 சோலார் பிவி மாட்யூல்கள் உற்பத்தியாளர் பட்டியலில் விக்ரம் சோலார் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 41 அங்கீகாரம் பெற்ற விஹியோ கஸ்தர்கள், 64 டீலர்கள் மற்றும் 67 சிஸ்டம் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு விரிவான வினியோக வலையமைப்பின் வழியாக இந்தியா முழுவதிலும் தனது செயலிருப்பை விக்ரம் சோலார் லிமிடெட் நிலைநாட்டியிருக்கிறது.

## 2வது விமான நிலையம் அமைய உள்ள பரந்தூரை தேர்வு செய்தது தமிழக அரசு தான்: மத்திய அமைச்சர் தகவல்

சென்னை 28, பிப்ரவரி 2025: விமான நிலையம் அமைக்க பரந்தூரை தேர்வு செய்தது தமிழக அரசு தான்' என மத்திய அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்தார். சென்னை விமான நிலையத்தில் நிருபர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது:

சென்னை விமான நிலையத்தை மேம்படுத்த தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. சிறப்பான சேவையை வழங்கி வரும் சென்னை விமான நிலையம் தனியார் மயம் ஆக்கப்படாது. எனவே இதை அரசே வழி நடத்த முடிவு செய்துள்ளது.

பரந்தூர் விமான நிலையம் தொடர்பாக அடுத்த வாரம் டெல்லியில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். விமான நிலையத்திற்கு பரந்தூரை தேர்வு செய்தது மாநில அரசுதான். பரந்தூர் விமான நிலையம் இடத்தேர்வில் மத்திய அரசுக்கு தொடர்பு இல்லை.

மாநில அரசு தேர்ந்தெடுக்கும் இடத்தில் நாங்கள் பணியை தொடங்குவோம். பரந்தூரில் 2வது விமான நிலையம் அமைய உள்ளது. இட தேர்வு முடிந்துவிட்டது. பரந்தூர் விமான நிலையம் தொடர்பாக பிற விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. கோவை விமான நிலையம் அதிக பயணிகளை கையாளுவதால் அதையும் விரிவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு ராம்மோகன் நாயுடு கூறினார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# இந்திய சாலைகளில் ஓராண்டு கொண்டாடும் வகையில் ஜாவா ஐகானிக் ஜாவா 350 லெகசி பதிப்பை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 28 பிப்ரவரி 2025: ஒரு வருடத்திற்கு முன்பு, ஜாவா 350 இந்தியாவில் கிளாசிக் மோட்டார் சைக்கிளிங்கின் வடிவமைப்பை, நவீன பொறியியலுடன் காலத்தால் அழியாத நேர்த்தியுடன் கலக்கிறது. இந்தியச் சாலைகளில் ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், ஜாவா யெஸ்டி மோட்டார் சைக்கிள்ஸ் இந்த மைல்கல்லை ஜாவா 350 லெகசி எடிஷனுடன் நினைவுகூருகிறது. இந்த பிரத்யேக பதிப்பு முதல் 500 வாடிக்கையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜாவா 350 லெகசி பதிப்பு (ஜாவா 350 லெகசி எடிஷன்) ஆனது, டூரிங் வைசர், டூ-அப் ரைடிங்கிற்கான வசதியை மேம்படுத்தும் பில்யன் பேக்ரெஸ்ட், பாதுகாப்பு மற்றும் ஸ்டைல் ஆகிய இரண்டையும் உயர்த்தி கூடுதல் பாதுகாப்பை வழங்கும் டூரிங் வைசர் போன்ற சிறப்பு சேர்த்தல்களுடன் சவாரி அனுபவத்தை மேலும் மேம்படுத்துகிறது. பதிப்பில் பிரீமியம் லெதர் கீசெயின் மற்றும் சேகரிப்பாளரின் பதிப்பான ஜாவா மினியேச்சர் ஆகியவையும் அடங்கும்.

கிளாசிக் லெஜெண்ட்ஸின் தலைமை வணிக அதிகாரி ஷரத் அகர்வால், "கடந்த ஆண்டு ஜாவா 350 அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் ரைடிங் சமூகத்தினரால் இந்த மோட்டார்சைக்கிள் விரும்பப்படுகிறது. ஜாவா 350 ஆனது காலமற்ற வடிவமைப்பு மற்றும் நவீன செயல் திறன் ஆகியவற்றின் சரியான சமநிலையை உள்ளடக்கியது. விகிதாச்சாரம்ஷஅழகியல் மற்றும் சவாரி இயக்கவியல் ஆகிய இரண்டிற்கும் சரியான விகிதாச்சாரத்தை உறுதிசெய்யும் ஒரு வடிவமைப்புக் கொள்கை, பழங்கால ஜாவாஸ் போலவே, ரைடர்களுக்கு இன்னும் அதிவேகமான அனுபவத்தை வழங்குகிறோம் - சிறந்த ஆறுதல், மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் கூடுதல் கவர்ச்சியை இந்த மைல்கல் கொண்டாட்டத்தை உருவாக்குகிறது."

வடிவமைப்பு பாரம்பரியம் - ஜாவா 350 அதன் செழுமையான பாரம்பரியத்திலிருந்து உத்வேகத்தை ஈர்த்து, புரட்சிகர வகை 353 க்கு மரியாதை செலுத்துகிறது. அதன் வடிவமைப்பு மொழி ஜாவாவின் உன்னதமான மோட்டார் சைக்கிள் பாரம்பரியத்தைப் பற்றி பேசுகிறது, அதே நேரத்தில் சமகால அழகியலைத் தழுவுகிறது.

யூனித்துவமான சில்ஹவுட்டானது மெருகூட்டப்பட்ட குரோம் பூச்சு முதல் நேர்த்தியான கோல்டன் பின்ஸ்ட்ரிப்ஸ் வரை - கவனத்தை ஈர்க்கும் ஒரு தெளிவான இருப்பை உருவாக்குகிறது. மோட்டார் சைக்கிளின் கவனமாக வடிவமைக்கப்பட்ட விகிதாச்சாரங்கள் மற்றும் நிலைப்பாடு காலமற்ற முறையீடு மற்றும் நவீன நுட்பங்களுக்கு இடையே ஒரு சரியான இணக்கத்தை அடைகிறது.

தொழில்நுட்ப சிறப்பம்சம் - ஜாவா 350 ஒரு மோட்டார் சைக்கிள் மட்டுமல்ல, ஒரு உணர்ச்சியையும், கைவினைத்திறனின் பரம்பரையையும், சவாரி செய்வதில் ஒரு தீராத ஆர்வத்தையும் பிரதிபலிக்கிறது. இது அதன் வகுப்பு-முன்னணி தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுடன் புதிய வரையறைகளை அமைக்கிறது, மிகவும் மதிக்கப்படும் 350 ஆல்ஃபா2-தி, லிக்விட்-கூல்டு எஞ்சின் மூலம் சிறந்த 22.5பிஎஸ் மற்றும் 28.1என்எம் ஐ வழங்குகிறது.

மோட்டார்சைக்கிள் அதன் பல முதல்-வகுப்பு அம்சங்களுடன் பட்டையை உயர்த்துகிறது: அசிஸ்ட் & ஸ்லிப்பர் கிளட்ச் மென்மையான கியர் மாற்றங்களை உறுதி செய்கிறது, துல்லிய-பொறிக்கப்பட்ட 6-வேக கியர்பாக்ஸ் உகந்த பவர் டெலிவரியை வழங்குகிறது, மேலும் டூயல்-சேனல் ஏபிஎஸ் சிறந்த கட்டுப்பாடு மற்றும் சிறந்த பிரேக்கிங் செயல் திறனுக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

இது ஒரு புதிய சேஸ் மற்றும் எஞ்சின், கிளாஸ்-லீடிங் 178மிமீ கிரவுண்ட் கிளியரன்ஸ், நீண்ட வீல்பேஸ் மற்றும் அகலமான டயர்கள், நிலைத்தன்மை மற்றும் சமநிலையை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட ஃபிட்-ஃபினிஷ், சிறந்த-இன்-கிளாஸ் ரைடு டைனமிக்ஸ் மற்றும் பெஞ்ச்மார்க் பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவை இன்று இந்திய சாலைகளில் மிகவும் கவர்ச்சிகரமான கிளாசிக் மோட்டார் சைக்கிளாக ஆக்குகின்றன.

சவாரி அனுபவத்தை மேம்படுத்த ஒவ்வொரு தொழில்நுட்ப உறுப்புகளும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு பயணத்தையும் மறக்க முடியாததாக ஆக்குகிறது.

நிறங்கள் மற்றும் மாறுபாடுகள் - ஜாவா 350 பல்வேறு விருப்பங்களுக்கு ஏற்றவாறு அதிநவீன தேர்வுகளை வழங்குகிறது. குரோம் வகைகளில் கிடைக்கிறது: டைம்லெஸ் மெரூன், கமாண்டிங் பிளாக், துடிப்பான மிஸ்டிக் ஆரஞ்சு மற்றும் திடமான மாறுபாடுகள்: ஸ்டன்னிங் டீப் ஃபாரஸ்ட், கிரே மற்றும் அப்சிடியன் பிளாக், ஒவ்வொரு வேரியண்டிலும் ஜாவாவின் புகழ்பெற்ற கவனத்தை விவரம் மற்றும் பிரீமியம் ஃபினிஷ் காட்டுகிறது. ஒவ்வொரு வண்ணமும் மோட்டார்சைக்கிளின் உன்னதமான வரிகளை பூர்த்தி செய்யும் வகையில் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, ரைடர்ஸ் அவர்களின் தனிப்பட்ட பாணியை வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்குகிறது.

ஜாவா 350 லெகசி எடிஷன் இப்போது நாடு முழுவதும் உள்ள ஜாவா டீலர்ஷிப்களில் தற்போதுள்ள அனைத்து வகைகளிலும் கிடைக்கிறது. உங்கள் அருகிலுள்ள ஷோரூமிற்குச் சென்று, உங்களுக்காகப் பழங்கதையை அனுபவியுங்கள் - வகுப்பைப் பாராட்டுபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது, முன்னோக்கிச் செல்லும் சாலையைத் தேடுபவர்களுக்காகக் கட்டப்பட்டது. ஜாவா 350 லெகசி எடிஷன் அறிமுக விலை ரூ. 1,98,950/- (எக்ஸ்-ஷோரூம், புது டெல்லி), முதல் 500 வாடிக்கையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

# பேரன்ட் ஜினி ஐஎன்சி நிறுவனத்தில் முதலீட்டாளராக உத்திசார் பார்ட்னராக நடிகர் ஆர் மாதவன் இணைந்துள்ளார். இருக்கும் இடத்திலிருந்தே பெற்றோர் கட்டுப்படுத்தக்கூடிய பேரன்ட் ஜினி, செயலி முதன்முதலாக இந்திய சந்தையில் அறிமுகம்



சென்னை, 28 பிப்ரவரி 2025: அமெரிக்காவை தளமாகக் கொண்ட பேரன்ட் ஜினி ஐஎன்சி. நிறுவனமானது பெற்றோர் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்தே தங்களது குழந்தைகளின் டிஜிட்டல் சாதனங்களை கட்டுப்படுத்த வகை செய்யும் பேரன்ட் ஜினி செயலியை உலகம் முழுவதும் உள்ள நுகர்வோரிடம் கொண்டு செல்ல உள்ளதாக இன்று சென்னையில் அறிவித்தது. புதிய பயன்பாட்டுக்கான இந்த செயலியின மிகப்பெரிய மற்றும் முதன்மையான இலக்கு கொண்ட நுகர்வோர் சந்தைகளில் இந்தியாவும் உள்ளது. நடிகர் ஆர் மாதவன் இந்த முயற்சியில் முதலீட்டாளராகவும், ஸ்டார்ட் அப் நிறுவனத்தின் உக்தி சார் பங்குதாரராகவும் இணைந்துள்ளார். இந்த ஒத்துழைப்பு, பொறுப்பான தொழில்நுட்ப பயன்பாட்டிற்கான மாதவனின் ஆதரவு மற்றும் டிஜிட்டல் யுகத்தில் குடும்பங்களுக்கு அதிகாரம் அளிக்கும் பேரன்ட் ஜினி -யின் நோக்கம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு சக்திவாய்ந்த ஒருங்கிணைப்பை பிரதிபலிக்கிறது.

பேரன்ட் ஜினி ஐஎன்சி நிறுவனம் இந்திய அமெரிக்க தொழில்முனைவோரான சசி நாகா நிதியுதவியுன் தொடங்கப்பட்டதாகும். இவரது தலைமையிலான குழு எதிர்காலத்தில் டிஜிட்டல் சாதனங்களில் பொறுப்பான திரை நேர நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில் இருப்பிட அடிப்படையில் செயல்படக்கூடிய பெற்றோர் கட்டுப்படுத்தும் செயலியாக இதை உருவாக்கி யுள்ளனர்.

செயலி அறிமுக விழாவில், பேரன்ட் ஜினி - யின் முதலீட்டாளர் மற்றும் உத்திசார் பங்குதாரரான ஆர் மாதவன், பேசுகையில், “பேரன்ட் ஜினி என்ற யோசனையுடன் சசி என்னை அணுகிய போது, சரிதாவும் நானும் வயது வந்த மகனை வளர்ப்பதில் பெற்றோராக நான் சந்தித்த சவால்களை நினைவூட்டியதால் உடனடியாக நான் இதில் இணைய ஒப்புக்கொண்டேன் என்றார். தங்கள் குழந்தைகள் அதிகளவில் டிஜிட்டல் சாதனங்களை பார்த்துக்கொண்டே இருப்பதால் வரும் ஆபத்துகளைக் கருத்தில் கொண்டு அவர்களை கட்டுப்படுத்துவது பெற்றோருக்கு எவ்வளவு பெரிய சவாலாக இருக்கும் என்பதை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. இந்த முயற்சியில் எனது பங்கை வகிப்பதில் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன், மேலும் உலகெங்கிலும் உள்ள லட்சக் கணக்கான கணக்கான பெற்றோருக்கு, குறிப்பாக இந்தியாவில், அவர்களின் குழந்தைகளின் ஆரோக்கியமான டிஜிட்டல் எல்லைகளை வளர்ப்பதற்கும், டிஜிட்டல் நச்சுத் தன்மையற்ற குழந்தைகளை கொண்ட தலைமுறையை வளர்ப்பதற்கும் இதில் ஒரு பங்குதாரராக இருப்பதில் உண்மையிலேயே பெருமிதம் கொள்வதாக அவர் கூறினார்.

கல்விக்காக குரல் கொடுக்கும், மாதவன், இன்றைய உயர் - இணைப்பு கொண்ட உலகில் டிஜிட்டல் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை அடிக்கடி வலியுறுத்தியுள்ளார். பேரன்ட் ஜினி - யில் சேர்வதற்கான அவரது முடிவு, தொழில்நுட்பம் குடும்பங்களை மூழ்கடிப்பதற்கு பதிலாக அவர்களை மேம்படுத்த வேண்டும் என்ற பரவலான நம்பிக்கையை பிரதிபலிக்கிறது.

பேரன்ட் ஜினி - குழுவானது இந்தியாவின் சாத்தியக்கூறுகளை மேம்படுத்துகிறது மற்றும் மிகப்பெரிய மற்றும் இளம் மக்கள்தொகை கொண்ட நாடான இந்தியா அதன் மிகப்பெரிய பி2சி சந்தையாக இருக்க முடியும் என்று நம்புகிறது. இந்தியாவில் உள்ள பெற்றோருடன் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் உள்ள பெற்றோருக்கும் இந்த செயலி கிடைக்கும். குழந்தைகள் தினசரி சராசரியாக 4.5 மணிநேர திரையில் நேரத்தை செலவிடுவதால், நவீன பெற்றோருக்கு டிஜிட்டல் நலன் அதிகரித்து வரும் கவலையாக மாறியுள்ளது.

பேரன்ட் ஜினி ஐஎன்சி நிறுவனர் மற்றும் தலைவரான சசி நாகா கூறுகையில், , “நான் மேடியை சந்தித்த போது எங்களுக்கு முதல் பெரிய நம்பிக்கை வந்தது, இந்த யோசனையை அவருடன் விவாதித்த போது உடனடியாக ஒப்புக்கொண்டது உண்மையில், எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் ஒரு படி மேலே சென்று, இதற்கான முயற்சியில் எங்களுடன் இணைந்து பங்காற்ற ஒப்புக் கொண்டார். பெருகிவரும் செல்வச் செழிப்புடன் இணைந்த டிஜிட்டல் தொழில்நுட்ப மாற்றத்தின் உச்சத்தில் இந்தியா இருப்பதாக நாங்கள் நம்புவதால், அதன் பெருகிவரும் நகர்ப்புற மக்கள் தொகையின் எண்ணிக்கையில் டிஜிட்டல் சாதனத்தை அணுகுவது என்பது இனி ஆடம்பரமாக இருக்கமுடியாது. இந்திய சந்தையில் இந்த முயற்சிக்கு ஆரம்ப கட்டத்திலேயே அமோக வரவேற்பு இருப்பதை காணமுடிந்தது.. லட்சக்கணக்கான இந்திய பெற்றோர்களின் இதயங்களில் விரைவாக இடம் பெறுவதை எதிர்நோக்கியுள்ளோம் என்றார்.

“டிஜிட்டல் யுகத்தில் குழந்தை வளர்ப்பு என்பது தொழில் நுட்பத்தை கட்டுப்படுத்துவது அல்ல - குழந்தைகள் அதை பொறுப்புடன் பயன்படுத்த ’ழிகாட்டுவதாகும். பேரன்ட் ஜினி செயலி மூலம் ஆரோக்கியமான டிஜிட்டல் எல்லைகளை உருவாக்குவது குறித்து பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் அதிகாரம் அளிப்பதை குறிக்கோளாக கொண்டுள்ளோம். டிஜிட்டல் சாதனங்களை குழந்தைகள் பயன்படுத்தும் போது அவர்களை கண்காணித்துக் கொண்டே இருப்பதில் இருந்து விடுபட்டு அந்த சாதனங்களை பொறுப்புடனும் பயன்படுத்துவதை

உறுதிப்படுத்தக்கூடிய பெற்றோரை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது என்று பேரன்ட் ஜினி நிறுவனரும் தலைமை செயல் அதிகாரியுமான ஹரி கடிராஜு கூறினார்.


சென்னை மற்றும் இந்திய சந்தைக்கான இலக்கு குறித்து பேரன்ட் ஜினி பார்ட்னரும் தலைமை தகவல் அதிகாரியான, குற்றாலீஸ்வரன் பேசுகையில், “சசி, நான் மற்றும் எங்கள் முக்கிய குழு உறுப்பினர்கள் பலர் இருக்கும் இடம் சென்னை. மாநிலத்துடனும் அதன் தலைநகருடனும் எங்களுக்கு பெரிய தொடர்பு உள்ளது. இருந்தாலும் இந்த செயலியை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியை நடத்துவதற்கு எந்த நகரை தேர்ந்தெடுப்பது என்பதில் எங்களுக்கு எந்த வித ஐடியாவும் இல்லாமல் இருந்தது., மேடி இங்குள்ள (சென்னை) மக்களால் அதிகம் விரும்பப் படுகிறார், எனவே இந்தியாவில் இந்த செயலியின விற்பனையை அதிகரிக்க எங்களது முயற்சியை இங்கிருந்து தொடங்குவது என்பதுதான் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்றும் அவர் கூறினர்.


நேர அடிப்படையிலான கட்டுப்பாடுகளை மட்டுமே நம்பியிருக்கும் பாரம்பரிய பெற்றோர் கட்டுப்பாட்டு செயலிகளை போல் இல்லாமல், பேரன்ட் ஜினி இருப்பிடம் சார்ந்த டிஜிட்டல் எல்லைகளை அறிமுகப்படுத்துகிறது, இது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் திரை நேரத்தை அவர்கள் இருக்கும் இடத்தின் அடிப்படையில்-வீடு, பள்ளி அல்லது வீட்டிற்குள் உள்ள குறிப்பிட்ட அறைகளின் அடிப்படையில் எவ்வளவு நேரம் பயன்படுத்தலாம் என்பதை பெற்றோர் தனிப்பட்ட முறையில் கட்டுப்படுத்த அனுமதிக்கிறது..

பேரன்ட் ஜினி, வீடு, பள்ளி, அல்லது வீட்டிற்குள் இருக்கும் குறிப்பிட்ட அறைகளில் குழந்தைகள் இருக்கும் போது அவர்கள் டிஜிட்டல் சாதனங்களை எந்த அளவுக்கு பயன்படுத்தலாம் என்பதை வரையறுக்க பெற்றோருக்கு அனுமதிக்கிறது.

முக்கிய கண்டுபிடிப்புகள்: இருக்கும் இடத்தில் இருந்தே செயலியை கட்டுப்படுத்தலாம்: குழந்தைகள் வீடுகளில் இருந்தாலும் பள்ளி மற்றும் நண்பர்களின் மிடுகளில் இருந்தாலும் பாதுகாப்பான விஷயங்களை குழந்தைகள் பார்க்கும் வகையில் அவர்களின் டிஜிட்டல் சாதனங்களை செயலி வாயிலாக கட்டுப்படுத்தி வைக்கலாம்.

# பழவந்தாங்கல் பகுதியில் உள்ள தங்கநகை கடையில் நகை வாங்குவது போல நடித்து தங்க செயினை திருடிய பெண் கைது. 12 கிராம் எடையுள்ள தங்கச்செயின் பறிமுதல்.





சென்னை, 28 பிப்ரவரி 2025: சென்னை, நங்கநல்லூர், 4வது பிரதான சாலையில் வசித்து வரும் ராஜேஷ், வ/31, த/பெ.கௌதம் என்பவர் அதே பகுதியில் லட்சுமி தங்க மளிகை என்ற பெயரில் தங்க நகை கடை நடத்தி வருகிறார். கடந்த 16.02.2025 அன்று மதியம் மேற்படி ராஜேஷ் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த பெண் ஒருவர் தங்கச்செயின் வேண்டும் என்று கூறியுள்ளார். உடனே ராஜேஷ் கடையிலிருந்த தங்கச்செயின்களை எடுத்து காண்பித்துள்ளார். மேற்படி பெண் தங்கச் செயின்களை வாங்குவது போல நடித்து மேற்படி ராஜேஷின் கவனத்தை திசை திருப்பி ஒரு தங்கச்செயினை திருடிவிட்டு, தங்கச்செயின் எதுவும் பிடிக்கவில்லை என கூறி கடையிலிருந்து வெளியே சென்றுள்ளார். ராஜேஷ் சிறிது நேரம் கழித்து தங்கச்செயின்களை சரிபார்த்த போது 12 கிராம் எடையுள்ள தங்கச்செயின் திருடு போயுள்ளது தெரியவந்துள்ளது. இது குறித்து ராஜேஷ் எஸ்-9 பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

எஸ் - 9 பழவந்தாங்கல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட பிரியங்கா, வ/36, க/பெ.ராமச்சந்திரன், மேலக்கோட்டையூர், சென்னை என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து 12 கிராம் எடை கொண்ட தங்கச்செயின் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்படட பிரியங்கா மீது ஏற்கனவே 8 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட பிரியங்கா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## ஏழு கிரகங்கள் நேர் கோட்டில் சந்திக்கும் அதிசய நாளான பிப்ரவரி 28 வெளியாகும் அகத்தியாவும் இந்த நிகழ்வில் இணைக்கிறது இயக்குனர் பா.விஜய்



சென்னை 28, பிப்ரவரி 2025: நெஞ்சிற்கினிய ஊடக நண்பர்களுக்கு அன்பு வணக்கம்,

சூரு இயக்குனராக அகத்தியா திரைப்படத்தை பற்றிய எண்ணப் பதிவினை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்

மூன்றாண்டு கால தொடர் உழைப்பில் நேர்த்தியான தொழில் நுட்பக் கலைஞர்களின் கூட்டணியோடு வேல்ஸ் ஃபிலிம் இண்டர்நேஷனல் லிமிடெட் டாக்டர் கே.ஐசரி கணேஷ் அவர்களின் பிரம்மாண்ட தயாரிப்பில் வைடு ஏஞ்சல் மீடியா அனீஸ் அர்ஜூன் தேவ் இணை தயாரிப்பில் , நடிகர்கள் ஜீவா, அர்ஜூன் ,ராஷி கண்ணா நடிப்பில் உருவாகியிருக்கும் அகத்தியா திரைப் படத்தின் ஊடக நண்பர்கள் காட்சியில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி.

ஒரு நிறையான படைப்பாக அகத்தியாவை உங்கள் முன் முதல் காட்சியாக திரையிடும் இந்நேரத்தில் தமிழ் மரபு சார்ந்த ஒரு முக்கியப் பதிவையும் நம் மண்ணும் நம் முன்னோர்களும் நமக்களித்த பெரும் ஆற்றலை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் ஒரு முயற்சியையும் அகத்தியா திரைப் படத்தில் கதைக்களமாக படைத்துள்ளோம்.

இந்நேரத்தில் ஒரு இயற்கையின் அதிசய ஆசீர்வாதமும் இத்திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது, நாசா விண்வெளி நிறுவனம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் பிப்ரவரி 28 ஆம் தேதி ஏழு கிரகங்கள் நேர் கோட்டில் சந்திப்பதாக அதிசய நிகழ்வை குறிப்பிட்டுள்ளது. அதே தேதியில் பிப்ரவரி 28 வெளியாகும் அகத்தியாவும் இந்த நிகழ்வில் இணைக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இக்கதையை எழுதும் போது அகத்தியாவின் அடிநாதத்தில் வான் வெளியில் நிகமும் ஏழு கிரங்களின் நேர்க் கோட்டு கூட்டணியை 'கிரக மாலை' என்று அழைப்பார்கள் அந்த கிரக மாலை என்கிற அதிசயத்தை இத்திரைப் படத்தின் ஆரம்பக் காட்சி முதலே எதேச்சையாக பதிவாகி கிளைமாக்ஸ் காட்சியே இந்த கிரக மாலை ஏற்படுகிற சம்பவத்தை நோக்கி படமாக்கப் பட்டுள்ளது. இது இயற்கையின் ஆசிகளாகவே தோன்றுகிறது,

ஒரு ஹாரர் ஃபேண்டஸி திரைப் படத்திற்குள் நாங்கள் சொல்ல முயற்சித் திருக்கும் நம் மண் சார்ந்த மரபு வழி அறிவை திரைப் படமாய் படைத் திருக்கிறோம்.

மக்களின் ஜனரஞ்சக வெற்றியை பெறுவதற்கு ஒரு சக நண்பனாக உங்களின் இரு கரங்கள் பற்றி அன்போடும் உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன். உங்களின் யூரா தரவிற்கும் பேரன் பிற்கும் நன்றியுடன் பா.விஜய்.

## மதுரவாயல் பகுதியில் சட்ட விரோதமாக குட்கா பாக்கெட்டுகளை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த பெண் கைது. 6.1 கிலோ எடை கொண்ட குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல்.

சென்னை 28, பிப்ரவரி 2025: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர காவல் எல்லைக் குட்பட்ட பகுதிகளில், காவல் ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் தீவிரமாக கண்காணித்து, சட்ட விரோதமாக குட்கா மற்றும் மாவா விற்பனை செய்து வரும் நபர்களை கண்டுபிடித்து கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் யொடர்ச் சியாக, தி-4 மதுரவாயல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமை யிலான தனிப்படை யினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படை போலீசார் 26.02.2025 அன்று மதியம், மதுரவாயல், ஏரிக்கரை, கந்தன் தெருவில் உள்ள ஒரு கடையை சோதனை செய்தபோது, அங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட் டுகளை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில் சட்ட விரோதமாக குட்கா புகையிலை பாக்கெட்டு களை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த கடை உரிமையாளர் மகாலட்சுமி, பெ/வ-55, க/பெ.ஏழுமலை, கந்தன் தெரு, ஏரிக்கரை, மதுரவாயல், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 6.1 கிலோ எடை கொண்ட ஹான்ஸ், கூல்லிப், விமல், வி1 உட்பட குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப் பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி மகாலட்சுமி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப் பட்டார். கைது செய்யப்பட்ட 4 எதிரிகளும் விசா ரணைக்குப் பின்னர் 27.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட வுள்ளனர். மீட்கப்பட்ட 10 பெண்களும் அரசு மகளிர் காப்பகத்தில் ஒப்படைக்கப் படவுள்ளனர்.

## கே.கே.நகர் பகுதியில் இருசக்கர வாகனத்தை திருடிய வெளிமாநில நபர் கைது. 1 இருசக்கர வாகனம் மீட்பு.



சென்னை 28, பிப்ரவரி 2025: சென்னை, அசோக் நகர், முதல் தெரு, எண்.55/38 என்ற முணூ வரியில் வசித்து வரும் செல்வராஜ், வ/22, த/பெ.ராஜேந்திரன் என்பவர் கே.கே.நகர், ஆற்காடு ரோட்டில் உள்ள தனியார் நிறுவனத்தின் குடோனில் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 09.01.2025 அன்று மேற்படி தனியார் நிறுவனத்தின் வெளியே அவரது பல்சர் இருசக்கர வாகனத்தை நிறுத்தி விட்டு திரும்ப வந்த பார்த்த போது, அவரது இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து செல்வராஜ் ஆர்-7 கே.கே நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற் கொண்டனர்.

ஆர்-7 கே.கே நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற வினோத்குமார், வ/23, த/பெ. விருசபேந்திரா, கர்நாடகா மாநிலம் என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து புகார் தாரரின் இருசக்கர வாகனம் மீட்கப் பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட வினோத்குமார் மேற்படி தனியார் நிறுவனத்தின் குடோனில் வேலை செய்து வந்தது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி வினோத்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப் பட்டார்.

## உதயா, அஜ்மல், யோகி பாபு இணைந்து நடிக்கும் 'அக்யூஸ்ட்' திரைப்படத்திற்காக அதிக பட்ஜெட்டில் படமாக்கப்பட்டு வரும் பரபரப்பான பேருந்து சண்டைக்காட்சி



சென்னை 28, பிப்ரவரி 2025: சொந்தமாக பேருந்து வாங்கப்பட்டு ஆக்ஷன் டைரக்டர் ஸ்டண்ட் சில்வா தலைமையில் 45 ஃபைட்டர்கள், 60 துணைக் கலைஞர்களுடன் உதயா, அஜ்மல் பங்கேற்பு. 'அக்யூஸ்ட்' திரைப் படத்தின் ஆக்ஷன் டீசர் விரைவில் வெளியாகிறது.

சச்சின் சினிமாஸோடு இணைந்து ஜேஷன் ஸ்டுடியோஸ், ஸ்ரீதயாகாரன் சினி புரொடக்ஷன் மற்றும் எம்ஜிஓய் ஸ்டுடியோஸ் பேனர்களில் ஏ.எல்.உதயா, தயா என்.பன்னீர் செல்வம், எம்.தங்கவேல் ஆகியோர் இணைந்து தயாரிக்கும் பிரம்மாண்ட திரைப் படம் 'அக்யூஸ்ட்'. உதயாவின் கலைப் பயணத்தில் வெள்ளி விழா வருடத்தை குறிக்கும் விதமாக உருவாகி வரும் 'அக்யூஸ்ட்' படத்தில் அஜ்மல் மற்றும் யோகி பாபுவுடன் இணைந்து அவர் நடிக்கிறார். இப்படத்தை கன்னட திரையுலகில் வெற்றி படங்களை இயக்கிய பிரபு ஸ்ரீநிவாஸ் இயக்குகிறார். பிரபல கன்னட நடிகை ஜான்விகா நாயகியாக நடிக்கிறார்.

'அக்யூஸ்ட்' படத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாகவும் திரைக்கதையின் முக்கிய அங்கமாகவும் திகழக்கூடிய பரபரப்பான சண்டைக்காட்சி ஒன்று கடந்த ஒரு வாரமாக பூந்தமல்லிக்கு அருகே உள்ள குத்தம் பாக்கத்தில் படமாக் கப்பட்டு வருகிறது. ஆக்ஷன் டைரக்டர் ஸ்டண்ட் சில்வா அதிக பொருட்செலவில் இந்த சண்டைக்காட்சியை வடிவமைத்து இயக்கி வருகிறார்.

முழுக்க பேருந்தில் நடைபெறும் இந்த சண்டைக் காட்சிக்காக 'அக்யூஸ்ட்' தயாரிப் பாளர்கள் சொந்தமாக பேருந்து ஒன்றை வாங்கியுள்ளனர். சுமார் 45 ஃபைட்டர்கள், 60 துணைக் கலைஞர்களுடன் உதயாவும் அஜ்மலும் ஸ்டண்ட் காட்சியில் பங்கேற் றுள்ளனர். உதயாவின் திரையுலக பயணத்தில் அதிக பொருட்செலவில் உருவாக்கப்பட்டு வரும் 'அக்யூஸ்ட்' அதிரடி படத்தின் பேசு பொருளாக பேருந்து சண்டை இருக்கும் என்று படக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

மொத்தம் 3 சண்டைக்காட்சிகள் இடம்பெறும் 'அக்யூஸ்ட்' திரைப்படத்தின் ஆக்ஷன் டீசரை விரைவில் வெளியிட படக் குழுவினர் திட்டமிட் டுள்ளனர். இதில் பேருந்து சண்டைக் காட்சியின் மேக்கிங் இடம்பெற்று ரசிகர்களை கவரும் என்று அவர்கள் கூறினர். ஜனவரி மாதம் படப்பிடிப்பு தொடங்கப் பட்டு இடைவெளி இல்லாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சுமார் 80 சதவீத படப்பிடிப்பு நிறை வடைந்துள்ள நிலையில், மார்ச் 10க்குள் மொத்த படப்பிடிப்பையும் நிறைவு செய்து கோடை விடுமுறைக்கு 'அக்யூஸ்ட்' திரைப்படத்தை வெளியிட திட்டமிடப் பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட அனைவருமே குற்ற வாளிகள் அல்ல, சிஸ்டத்தில் ஏற்படும் பிழைகளால் நல்லவர்கள் கூட எப்படி பாதிப் படைகிறார்கள், தாதாவாக உருவா கிறார்கள் என்பதை விறுவிறுப்பாக சொல்லும் 'அக்யூஸ்ட்' திரைப்படத்தில் இதுவரை ஏற்றிராத முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் உதயா நடிக்கிறார். அவருடன் முதல் முறையாக அஜ்மல் மற்றும் யோகி பாபு இணைந்துள்ளனர்.

மருதநாயகம்.ஐ ஒளிப்பதிவு செய்ய நரேன் பாலகுமார் இசை அமைக்கிறார். முன்னணி எடிட்டரான கே.எல். பிரவீன் படத் தொகுப்பை கையாளு கிறார். கலை இயக்கம் - ஆனந்த் மணி, பத்திரிக்கை தொடர்பு - நிகில் முருகன்.

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பு

சென்னை 28, பிப்ரவரி 2025: இப்போது விவாதத்திற்கு எடுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு தொடர்பாகப் புதியதொரு மசோதா தாக்கல் செய்ய இருப்பதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், மக்கள் தொகை அடிப்படை யிலே தொகுதிகள் எண்ணிக்கை மறு சீரமைப்பு செய்யப்படும் என்பதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு கடிதம் எழுதியிருந்தார். அதை எல்லோரும் பார்த்திருப்பீர்கள்.

அதில் 1971 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின்படி மறுசீரமைப்பு செய்ய வேண்டிய அவசியம் வந்தபோது, அதற்காக நாடாளுமன்றத்தில் தனி சட்டத் திடுத்தம் இயற்றி, தள்ளி வைத்தது. அப்போது இருந்த ஒன்றிய அரசு மக்கள்தொகைக் கட்டுப்பாடு திட்டத்தை ஊக்குவித்தது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்தியதன் காரணமாக, வடமாநிலங் களுக்கும் தென் மாநிலங்களுக்கும் சம்மமன்ற நிலை நிலவுகின்றது. அதனால் தொகுதி மறுசீரமைப்பு 25 ஆண்டு தள்ளி வைக்கலாம் என்று தள்ளி வைக்கப்பட்டது. அதற்கு பிறகு 2004 ஆம் ஆண்டு வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது அந்த முடிவை ஏற்றுக்கொண்டு, மீண்டும் தள்ளி வைக்கப் பட்டது. மறுசீரமைப்பு என்பது மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே செய்ய முடியாது என்பதை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில்தான் நாடாளுமன்றம் சட்டம் இயற்றி தள்ளி வைத்தது. இதற்கு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு மறுசீரமைப்பு செய்ய முடியாது என்பதை நாடாளுமன்ற ஒப்புக் கொண்டதாகத் தான் பொருள் கொள்ள வேண்டும்.

இப்போது அப்படிப்பட்ட எந்த நிபந்தனைகளையும் இல்லாத நேரத்தில், மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே தொகுதிகளை மறுசீரமைப்பு செய்தால், மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்களை செம்மையாக நிறைவேற்றி இருக்கிற தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநில ங்கள் ஜனநாயகரீதியாக தங்களின் பிரதிநிதித் துவத்தை நாடாளு மன்றத்திலும் சட்ட மன்றத்திலும் இழக்கும் என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள், அவ்வாறு நடக்கக் கூடாது என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

1971ல் என்ன நிலைப்பாட்டை எடுத்தோமோ, அதுதான் தொடர வேண்டும் என கடிதம் எழுதியிருக்கிறார். அந்த கடிதத்திற்குப் பதில் அளிக்கிற வகையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பேசுகிற போது விகிதாசார அடிப்படையில்தான் மறுசீரமைப்பு அமையும், அப்படி விகிதாசார அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்யும் போது தமிழ்நாட்டிற்கு ஒரு தொகுதி கூட குறையாது என ஹிந்தியில் அறிவித்து இருக்கிறார்.

அது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டு, ஒன்றிய அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் புரோ-ராடா என சொல்லப் பட்டு இருக்கிறது. அந்த புரோ-ராடா என்பது இப்போது இருக்கும் தொகுதிகளின் அடிப்படையில் உயருமா, அல்லது மக்கள் தொகை அடிப்படையில் உயருமா என்பதற்கு, எந்த பதிலும் இல்லை.

அந்த குழப்பதைத் தீர்ப்பதாக எண்ணிக் கொண்டு அண்ணாமலை திடீரென நாடாளுமன்றத் தொகுதிகளின் விகித அடிப்படையில் எண்ணிக்கை உயரும் என்று உறுதியாக தெரிவித்து இருக்கிறார். இவ்வாறு உள்துறை அமைச்சர் சொல்ல வில்லை; உள்துறை அமைச்சரின் பேச்சுக்கு அண்ணாமலை புதியதாக விளக்கம் கூறியுள்ளார். இந்த கருத்து தவறு.

எனவேதான், மக்கள்தொகை அடிப் படையில் தொகுதி மறுசீரமைப்பு தமிழ்நாட்டு மக்கள் உடன்பாடு அல்ல, தமிழக அரசிற்கு ஏற்புடையது அல்ல என்பதை முதலமைச்சர் அவர்கள் தெள்ள தெளிவாகக் கடிதம் எழுதியுள்ளார். அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கும் அழைப்பு விடுத் துள்ளார்.

எங்களின் எண்ணிக்கைக் குறைய கூடாது என்பது மட்டுமல்ல; நீங்கள் கொண்டு வருகிற எந்தவொரு திட்டத்திலும் எங்களுக்கு அதே எண்ணிக்கையை வைத்துக் கொண்டு வடமாநிலங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் அதிகமாக கொடுத்தாலும், அது அநீதிதான் என்பதில் நாங்கள் மிக தெளிவாக இருக்கிறோம்.

## அண்ணாநகர் பகுதியில் உள்ள ஸ்பாவில் பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்திய 4 நபர்கள் கைது. வெளிமாநில பெண்கள் உட்பட 10 பெண்கள் மீட்பு. ரொக்கம் ரூ.3,89,900/-, 9 செல்போன்கள், மற்றும் 1 லேப்டாப் பறிமுதல்.

சென்னை 28, பிப்ரவரி 2025: சென்னை பெருநகர காவல், கே-4 அண்ணாநகர் நிலைய ஆய்வாளர் தலைமை யிலான தனிப்படை யினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் நேற்று (26.02.2025) அண்ணாநகர் மேற்கு, 5வது தெருவில் உள்ள ஒரு ஸ்பா & சலூனை கண்காணித்த போது, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடப்பது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில், பெண் காவலர்கள் உள்ளிட்ட காவல் குழுவினர் மேற்படி ஸ்பா & சலூனில் சோதனைகள் மேற்கொண்டு, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்திய 1.பசுல் ரகுமான், வ/ 41, த/பெ.முகமது அலால், கற்பகம் அவென்யூ, 3வது தெரு, ஆர்.ஏ.புரம், சென்னை 2.புவனேஷ், வ/33, த/பெ.துரைராஜ், மின் நகர், காஞ்சிபுரம் மாவட்டம் 3.இம்மானுவேல், வ/21, த/பெ.ரில்புலால், அசாம் மாநிலம், 4.கைச்மோய் ரங்கோ மோய், பெ/33, த/பெ. கெயலாங் மோய், அசாம் மாநிலம் ஆகிய 4 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து ரொக்கம் ரூ.3,89,900/-, 9 செல்போன்கள், 1 லேப்டாப் , 1 டிவிஆர் மற்றும் 1 மவுஸ் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், மேற்படி இடத்தில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்த தங்க வைத்திருந்த வெளிமாநில பெண்கள் உட்பட 10 பெண்கள் மீட்கப்பட்டனர். மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக உள்ள மற்றொரு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.